அசல் வழக்கு எண்.101/2017

**DW**.1 - திரு. சந்தானகிருஷ்ணன்

நாள். 16.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை சுந்தரராஜ் நாயுடு, கோவிந்தரராஜ் நாயுடு மற்றும் ஜெயராம் ஆகியோர்கள் சேர்ந்து தான் கிரையம் செய்து கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரம் மேற்படி 3 நபர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்தது தான். புல எண்.244/2 கீழ்புரம் 1 ஏக்கர் 18 செண்ட் நிலம் கோவிந்தரராஜ் நாயுடுக்கு வாய்க்கரால் பாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். அந்த சொத்தை கோவிந்தரராஜ் நாயுடு மட்டும் பி.வா.சா.ஆ.6 கிரையபத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்ததாக எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி கிரையபத்திரத்தை சுந்தரராஜ் நாயுடு, கோவிந்தரராஜ் நாயுடு மற்றும் ஜெயராம் ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளார்கள். அந்த பத்திரத்தில் அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர வாய்க்கரால் பாகம் ஏற்பட்டதாகவோ அதன் அடிப்படையில் கோவிந்தரராஜ் நாயுடுவிற்கு அந்த சொத்து ஒதுக்கப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சாட்சி பதில் அளிக்காமல் நீங்களே பதில் சொல்லுங்கள் என்று சொல்கிறார். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் மேற்கு மாலாக ஸ்ரீரங்கமாள் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை மேற்படி 3 சகோதரர்களும் சேர்ந்து பி.வா.சா.ஆ.7 ஒத்தி ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் 3 வது இனத்திற்கும் பங்கிற்கும் ஏற்பட்டதுமான என்று வாசகம் கண்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் வாய்க்கரால் பாகம் ஏற்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாகவோ, புல எண்.244/2-ல் 2 ஏக்கர் 36 செண்ட் விஸ்தீரணம் கொண்ட சொத்து சம்பந்தமாகவோ சுந்தரராஜ் நாயுடு, கோவிந்தரராஜ் நாயுடு மற்றும் ஜெயராம் ஆகியோர்களுக்கு இடையே 1962 ம் வருடத்திலோ அல்லது எந்த காலத்திலும் வாய்க்கரால் பாகம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை வாய்க்கரால் பாகம் பிரிக்காமல்

மேற்படி 3 சகோதரர்களும் பிரிவினையின்றி கூட்டாக அனுபவித்து வந்த காரணத்தினால் தான் பி.வா.சா.ஆ.2 முதல் 7 பத்திரங்களில் மேற்படி சொத்துக்களை பொறுத்து கூட்டாக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லியுள்ள வாய்க்கரால் பாகம் மேற்படி சகோதரர்களுக்குள் மேற்படி சொத்துக்களை பொறுத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 3 சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும் அதன் மூலம் வழக்கு சொத்து என் தகப்பனாருக்கு கிடைத்தது என்றும், முழு உரிமை கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து மேற்படி சுந்தரராஜ் நாயுடு, கோவிந்தரராஜ் நாயுடு மற்றும் ஜெயராம் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், எனவே அவர்களுக்கு தலா 1/3 பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது மகனும் வாதிகள் மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகளின் கூட்டுரிமைக்கு இடைஞ்சல் செய்யும் வகையில் நடந்ததால் 1ம் வாதியும், அவருடைய சகோதரரும் பாகப்பிரிவினை கேட்டு 27.02.2006 ம் தேதி வா.சா.ஆ.11 அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளதில் அந்த பதில் அறிவிப்பின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு சுமூகமாக பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று நான் சொன்னதின் பேரில் வாதிகள் வா.சா.ஆ.11 அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் வருவாய் ஆவணங்களை மாற்றி வழக்கு சொத்தை எனக்கு தனித்து பாத்தியம் இருப்பதுபோல் காட்டி 7ம் பிரதிவாதியின் கணவரும், 8 மற்றும் 9 பிரதிவாதிகளின் தகப்பனரான சந்திரன் என்பவருக்கு விற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு விற்ற விவரம் 2015ம் வருடத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 1ம் வாதி மனு செய்ததின் பேரில் தெரிய வந்தது என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு என் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி 1ம் வாதியும், 4ம் பிரதிவாதியும் DRO மதுரைக்கு அப்பீல் தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எனக்கு DRO நீதிமன்றத்திலிருந்து மேற்படி அப்பீல் சம்பந்தமாக அறிவிப்பு வந்தது. மேற்படி மேல்முறையீட்டில் தரப்பினர் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி தங்களுடைய பிரச்சினையை முடித்துக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு வாதி இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்

என்றால் சரிதான். 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்ட உயில் சாசனத்தில் வழக்கு சொத்தானது சுந்தரராஜ் நாயுடு, கோவிந்தரராஜ் நாயுடு மற்றும் ஜெயராம் ஆகியோர்கள் அடைந்து அனுபவித்து கொள்ளவேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது பிராதில் கோரியுள்ளபடி வாதிகளுக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/- சந்தானகிருஷ்ணன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.06.16 07:38:19 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.